

ARASU ARTS
எழுமின் தளபதிகாள்!
தலைவர் கலைஞர்

எழுமின் இளைஞர்காள்!

தலைவர் கலைஞர்

தி.மு.க. அறக்கட்டளை
★ போராசிரியர் ★
அன்பழகன் நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

வெளியீடு :

தி.மு.க. இளைஞர் அணி

"அன்பகம்"

508, அண்ணா சாலை

சென்னை - 600 018

ஜூலை 1999

18258


விலை: ரூ. 5/-

அச்சிட்டோர்: சில்வர் ஸ்ட்ரீக்,
174, பீட்டர்ஸ் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

இந்நூல்...

1999 ஜூன் 21 அன்று சென்னை, கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற தி.மு.க இளைஞர் அணி மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையினை "**எழுமின் இளைஞர்காள்!**" என்கிற தலைப்பில் இந்நூல் வடிவில் பெருமையுடன் வெளியிடுகிறோம்.

தி.மு.க இளைஞர் அணி



தலைவர் கலைஞர் அவர்கள் 21.6.99 அன்று சென்னை கலைஞர் அரங்கத்தில் இளைஞர் அணி அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் ஆற்றிய உரை:-

இன்று மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இளைஞர் அணியின் கூட்டத்தில் உங்களையெல்லாம் ஒருசேரக் கண்டு களிப்பதில் நான் மிகுந்த உற்சாகம் பெறுகிறேன். இங்கே பேசிய இளைஞர் அணியின் தம்பிமார்கள் அனைவரும் தி.மு.கழகத்தின் வெற்றிகளில் எங்களுக்கும் பங்கு உண்டு என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். நல்லகாலம், இந்த வெற்றியே எங்களுடையது தான் என்று சொல்லாமல் பங்கு உண்டு என்று சொன்னதிலிருந்து அது முக்கால் பங்கா, அரைப் பங்கா, கால் பங்கா என்று நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய வேலை என்னுடையது என்பதை நான் புரிந்து கொள்கிறேன்.

வெற்றிகளை ஈட்டித்தருக

அளவுகடந்த உற்சாகம் உங்களுக்கு இருக்கிறது, எல்லாமே நம்மால் தான் நடந்தது என்று கூறவேண்டும் என்கிற ஆர்வம் அளவு கடந்து இருக்கின்றது. நான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். ஆர்வம் அளவு கடந்திருக்கின்றது. அப்படி இருப்பதை நானும் விரும்புகிறேன். ஆனாலும் அந்த அளவு கடந்த ஆர்வத்தை மிக முக்கியமான நேரத்தில்

ஒரு எல்லைக்கு உட்படுத்தி இயக்கத்திற்கு வெற்றிகளை ஈட்டித் தர வேண்டிய பெரும் பொறுப்பும் உங்களுடைய இளம் தோள்களில் சுமத்தப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது.

தம்பி அன்பில் பொய்யாமொழி இங்கே பேசும்போது எனக்கே அதிர்ச்சி தரக் கூடிய ஒரு செய்தியைச் சொன்னார். அன்பகத்தை இளைஞர் அணிச் செயலாளர் ஸ்டாலின் விலைக்கு வாங்கி இளைஞர் அணிக்குக் கொடுத்தார் என்று சொன்னார். ஆனால் ஜாக்கிரதையாகச் சொன்னார்.

ஏதோ ஒரு இடத்தை விலைக்கு வாங்கி பெயர் சூட்டினார் என்று சொல்லாமல் அன்பகத்தை வாங்கினார் என்று சொன்னார். அதிலிருந்து ஏற்கனவே அன்பகம் இருந்தது என்று பொருள்.

அன்பகத்தை வாங்கியது, நான் பொருள்ளாளராக இருந்த அந்தக் காலத்தில். அதை வாங்கி அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் நான் வழங்கிய போது அந்தக் கட்டிடத்தின் முகப்பில் நின்று பேசிய அண்ணா - " இதற்காகத் தான் தம்பி, உன்னைப் பொருளாளனாக ஆக்கினேன் " - என்று கூறினார். அந்தப் பொன் வரிகள் இன்னமும் என் நெஞ்சத்தில் பசுமையாக இருக்கின்றன.

ஒரு போட்டி வந்தது. அண்ணா அவர்கள் மறைந்த பிறகு இந்த அறிவாலயத்தை நாம் கட்டிய நேரத்தில் தொழிலாளர் அணியின் செயலாளர், அருமை நண்பர் குப்புசாமி அவர்கள் அன்பகத்தில் தொழிலாளர் அணிக்கு இடம் வேண்டுமென்று கேட்டார். அதே நேரத்தில் தம்பி ஸ்டாலின் இளைஞர் அணிக்கு இடம் வேண்டுமென்று கேட்டார். நான் விதித்த நிபந்தனை;

யார் பத்து இலட்சம் ரூபாய் முதலில் வசூலித்து தருகிறார்களோ அவர்கள் அங்கே 'குடியிருந்து கொள்ளலாம்' என்று சொன்னேன். உங்களுடைய அன்பான ஆதரவோடு ஸ்டாலின் அதிலே வென்று தற்போது அங்கே குடி இருக்கிறீர்கள், அவ்வளவு தான்.

மகிழ்ச்சியான எழுச்சி

இளைஞர்களின் எழுச்சியைக் காணும்போது என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. 'இளைஞர்கள் ஒரு இயக்கத்தின் ஈட்டி முனைகள்' என்றார் பேரறிஞர் அண்ணா. நீங்கள் ஈட்டி முனைகள் என்று வர்ணிக்கப்பட்ட காலம் அந்தக் காலம். அண்ணா அவ்வாறு சொன்ன அந்தக் காலம் தேர்தல் நமக்கு முக்கியமாக இருந்த காலம் அல்ல.. 'இளைஞர்கள் சமுதாயத்தின், இயக்கத்தின் ஈட்டி முனைகள்' என்று சொன்னபோது திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே போட்டியிடாத காலம்.

இப்போது தேர்தல்களால் நம்முடைய கொள்கைகளை சாதனைகளாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்து ஆக்கிட முடியும் என்று செயல்படுகின்ற காலம். எனவே இந்தக் காலத்தில் ஈட்டி முனைகளாக இருக்க வேண்டுமென்றில்லை. தேர்தலில் ஆயிரக் கணக்கான வாக்குகளை ஈட்டிய முனைகளாக நீங்கள் எல்லாம் இருந்திட வேண்டும். ஈட்டிய என்பதற்கு சேகரித்த, திரட்டிய என்று பொருள்.

மொழியில் தேர்ச்சிபெறுக

இதைச் சொல்லக் காரணம் இளைஞர்கள் பலருக்கு, தமிழ் அவ்வளவு முழுமையாகத் தற்போது தெரிவதில்லை.

தலைவர் இப்படி கூறுகிறாரே என்று யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இளைஞர்கள்; மொழியில் முழுமையாகத் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்திட வேண்டும். நல்ல முறையிலே மொழியைக் கற்றவர்கள்கூட சில நேரங்களில் தவறு செய்கிறார்கள். - 'வாழ்த்துக்கள்' - என்று இன்றைக்கும் பலர் எழுதுகிறார்கள். அப்படி எழுதக் கூடாது என்று பெரும் புலவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். வாழ்த்துகள் என்று - க் - என்ற ஒற்று இல்லாமல் எழுதுவது தான் சரியாகும். அதைப்போல இங்கே பேசிய பொய்யாமொழி கூட - அவருக்கு முன்பு பேசிய திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொரு இளைஞர் அணி தம்பி பேசும்போது கூட கரூருக்கு "அருகாமையில்" உள்ள ஊர் என்று பக்கத்திலே உள்ள ஊரைக் குறிப்பிட்டார். அருகாமையில் என்றால் பக்கத்திலே, அருகிலே உள்ளது என்பதை குறிப்பிடுவதல்ல. அருகாமையில் என்றால் அதிக தூரத்தில் என்று தான் பொருள். இது உங்களில் பலருக்குக் தெரிந்திருக்காது. சில புலவருக்கே கூட இது தெரிந்திருக்காது.

இயலும், இயலாமை

இதற்கு மேலும் ஒரு உதாரணம் கூறவேண்டுமேயானால் இயலாமை என்றால் முடியாது என்று அர்த்தம். இயலும் என்றால் முடியும். இயலாமை என்றால் முடியாது.

அதைப் போல அருகில் என்றால் இப்படி தமிழிலேயே சொல்லுக்குச் சொல் ஏற்படுகிற வேறுபாடு பொருளில் வித்தியாசப்படுகின்றன என்பதை இங்கே நான் கூறுவது இளைஞர் அணியினர் இதிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்திட வேண்டுமென்பதற்காகத் தான்.

ஊக்கம் என்கிற உணர்வு

நாங்கள் எல்லாம் இளைஞர்களாக இருந்த அந்தக் காலத்தில் நானும், பேராசிரியர் அவர்களும் மற்றும் இன்றைய திராவிட இயக்கத்தின் முன்னோடிகளாக இருக்கின்ற பலரும் மொழிப் பற்று, கலை ஆர்வம், காவிய நயம், இலக்கிய உணர்வு, வரலாற்றுச் செய்திகளை எடுத்துச் சொல்வதில் ஒரு ஊக்கம் கொண்ட அந்த உணர்வு பெற்றவர்களாக இருந்தோம். இன்றைக்கு அந்த நிலை பெருமளவுக்கு குறைந்துபோய் விட்டது என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். எனவே நீங்கள் அந்த நிலையிலும் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அரசியல் ரீதியாக பெறுகின்ற உயர்வோடு, இலக்கிய ரீதியாகவும், மொழி ஆர்வத்தோடு, சமுதாய நோக்கத்தோடு சமுதாய முன்னேற்றமே நமது குறிக்கோள் என்று என்றைக்கும் நம் நெஞ்சில் பதிந்திருக்கும் உறுதியோடு இளைஞர் அணியினர் தங்கள் பொதுவாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

சீர்திருத்த வேலை காத்திருக்கிறது

ஒரு இளைஞர் அணித் தம்பி இங்கே பேசும்போது 'தலைவா! உன்னை நம்பியிருக்கிறோம், உங்கள் ஆட்சியில் எங்களுக் கெல்லாம் வேலை கொடு!' என்றார். அதற்காகத் தான் உங்களை இங்கே அழைத்திருக்கிறோம். நீங்கள் கேட்ட வேலையை கொடுத்து விட்டால் பிறகு இந்த வேலைக்கு (நாட்டை சீர்திருத்தும் வேலைக்கு) நான் யாரைக் கூப்பிடுவது?

நூறாண்டுப் பேரியக்கம்

இந்த இயக்கம் ஏதோ திடீரென்று மின்னல் போலத் தோன்றியது அல்ல, நேற்று பெய்த மழையில் இன்று காலையில் முளைத்த காளானும் அல்ல. இதற்கு நூறாண்டு கால உறுதியான தெளிவான வரலாறு உண்டு.

ஏறத்தாழ 1912 - 1916 ஆகிய நான்காண்டு கால இடை வெளியில் தமிழகத்தில் இந்த இயக்கத்திற்கான விதை ஊன்றப்பட்டது. அந்த விதை, விருட்சமாக வளர்ந்திருப்பது தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பேரியக்கம். சரியாகச் சொல்ல வேண்டுமேயானால் 1912ஆம் ஆண்டு அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோன்றிய உணர்வு தான் பெரிய சமுதாயத்திற்கு சொந்தக்காரர்களாகிய நாம் தமிழகத்தில் இருக்கின்ற ஒரு சிறிய சமுதாயத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறோமே, அது ஏன்? நமக்கென்று ஒரு நாடு இருக்கிறது, நமக்கென்று எண்ணிக்கையில் பெரும்பான்மை கொண்ட சமுதாயம் இருக்கிறது, ஆனால் எண்ணிக்கையில் குறைந்தவர்களால் நாம் இன்றைக்கு அடிமைப்படுத்தப் பட்டிருக்கிறோம்; ஆதிக்கம் செலுத்தப்படுகிறோம் - என்ற சிந்தனை தோன்றி அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்த அந்தக் காலக் கட்டத்தில், இந்தியாவின் விடுதலைக்காகப் போராடுகிறோம் என்று சொல்லிக் கொண்ட தேசிய இயக்கமும் இன்னொரு பக்கத்திலே வளர்ந்தது. அந்த தேசிய இயக்கத்தில் தன்னை ஒப்படைத்துக் கொண்டு வைக்கம் வரை சென்று 1924ஆம் ஆண்டு போராடிய தந்தை பெரியார் தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

அப்போது தான் 1916ஆம் ஆண்டு நான் இப்போது சென்னையில் வெற்றி பெற்றுள்ள சேப்பாக்கம் தொகுதியில் அந்தத் தொகுதியும் திருவல்லிக்கேணி தொகுதியும் சந்திக்கும் இடத்தில் நடேசனார் என்ற பெருமகன் தோன்றினார். அவர் தான் திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடி. அவர் தன் நண்பராக டாக்டர் நாயர் அவர்களை சேர்த்துக் கொண்டார். அவர்களோடு சர் பி. தியாகராயரும் இணைந்து கொண்டார். இந்த மூவரும் இணைந்து தமிழ்ச் சமுதாயத்திலே பிராமணர் - பிராமணர் அல்லாதார் என்றிருக்கின்ற நிலையையும் - பிராமணர் உயரட்டும், அதைப்பற்றிக் கவலை யில்லை, பிராமணர் அல்லாதாருக்கு வேலை வாய்ப்பில் இடம் இல்லையா? கல்வித் துறையில் இடம் இல்லையா? அவர்கள் படிப்பதே பாவமா? அவர்கள் படிப்பதற்கு தகுதியற்றவர்களா? இந்த அநீதியைக் கூளைய வேண்டாமா? என்று ஆர்த்தெழுந்தார்கள்.

திராவிடர் சங்கம்

இப்படிச் சின்னஞ்சிறு அளவில் அன்றைக்கு உருவான இயக்கம் முதலில் பெற்ற பெயர் திராவிடர் சங்கம் என்பதாகும். அந்த திராவிடர் சங்கம் தான் 1925ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்கள் காங்கிரசிலிருந்து விடுபட்டு வெளி வந்த பிறகு ஆந்திராவில், கர்நாடகாவில் ஒரு பகுதியில் கேரளாவில் தமிழகத்தில் உள்ள பெரும் தலைவர்களால் - இவர்கள் எல்லாம் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்ற அளவில் - தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) என்கிற பெயரால் இயங்கிற்று.

அதுவரையில் காங்கிரசில் இருந்த பெரியார் ஏன் விலகினார் என்றால் - அந்நாள் வரை நடைபெற்றுக் கொண்டிருந்த ஆட்சி தமிழகத்தில் - தமிழகம் என்று சொல்வது கூட தவறு - சென்னை ராஜ்யத்தில் - அது வரையில் நடைபெற்ற ஆட்சி வெள்ளைக்காரர்களை அனுசரித்துச் செல்கிற, அதே நேரத்தில் தென்னாட்டு மக்களுக்காக குரல் கொடுக்கின்ற இயக்கமாக வளர்ந்த தென்னிந்திய நல உரிமைச் சங்கம் - ஜஸ்டிஸ் பார்ட்டி - நீதிக் கட்சியின் ஆட்சி. அந்தக் கட்சியின் அமைச்சர்கள் தான் ஆண்டு வந்தார்கள். அவர்களை வெள்ளைக்காரர்களின் அடிமைகள் என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள்.

ஆனால், அந்தக் காங்கிரஸ் கட்சி 'க்யூம்' என்ற வெள்ளைக்கார துரையினால் தான் தொடங்கப்பட்டது. அந்தக் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும் அதனுடைய சொற்பொழிவாளர்களும் ஜஸ்டிஸ் கட்சி, நீதிக்கட்சி வெள்ளைக்காரர்களின் அடிமை என்ற பிரச்சாரத்தைச் செய்து, செய்து, இந்த இயக்கத்தை அழிக்க நினைத்தார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் காங்கிரஸ் இயக்கத்திலே அப்போது பல வழக்கறிஞர்கள் இருந்தார்கள். பெரும்பாலும் 100க்கு 97 வழக்கறிஞர்கள் பிராமணர்களாகத் தான் இருந்தார்கள். எப்படியாவது நீதிக் கட்சியை அழித்து விட வேண்டுமென்று நினைத்தார்கள். அதற்காகவே வெள்ளைக்காரர்களின் அடிமைகள் என்று மக்களிடம் பிரச்சாரம் செய்தார்கள்.

பொப்பிலி ஆட்சி

அது பல ஆண்டு காலம் எடுபடவில்லை. ஆனால் 1937ஆம் ஆண்டு அப்போது தமிழகத்தில் சென்னை ராஜ்யத்தை ஆண்டு வந்தவர் பொப்பிலி அரசர்.

அவர் ஆட்சிக்கு வந்த போது இவர்களுடைய கூட்டு முயற்சியால் இவர்களுடைய தவறான பிரச்சாரத்தால், மக்கள் ஆதரவைப் பெற்ற பொப்பிலி ஆட்சியைக் கவிழ்த்தார்கள். எனக்கு இன்னமும் நன்றாக நினைவில் இருக்கிறது, உங்களை விட வயதில் சிறுவனாக மாணவப் பருவத்தில் திருவாரூரில் தெற்கு வீதியில் நின்று கொண்டு அந்த வழியாகச் சென்ற ஊர்வலத்தைப் பார்த்தேன். அந்த ஊர்வலம் - அந்த ஆண்டு காங்கிரஸ் கட்சி சென்னை மாநிலத்தில் வென்றதைக் கொண்டாடுவதற்காக நடந்த ஊர்வலம். அந்த ஊர்வலத்திலே செய்யப்பட்ட முழக்கம் என்ன தெரியுமா? - 'பொப்பிலியின் ஆட்சி அப்பளமாப் போச்சு' - என்று இப்படியொரு முழக்கத்தை அந்த ஊர்வலத்திலே முழங்கினார்கள்.

நான் மாணவனாக - இளைஞனாக நின்று கொண்டு பார்த்த காட்சி அது. அன்று ஏற்பட்ட அந்த உணர்வு - பொப்பிலியின் ஆட்சி அப்பளமாகப் போச்சு என்கிறீர்களே, என்ன காரணம் என்று கேட்ட போது எனக்குக் கிடைத்த விடை தான் - இவர்கள் எல்லாம் பார்ப்பனர் அல்லாதாருக்காகப் பாடுபடுகிறவர்கள், இவர்களுடைய வளர்ச்சியைப் பொறுக்காமல் தான் காங்கிரஸ் என்கிற போர்வைக்குள் விடுதலை என்ற போர்வைக்குள், ஒளிந்து கொண்டு இப்படி இந்த ஆட்சியை வீழ்த்தி விட்டார்கள் என்ற விளக்கம்.

விடுதலைப் போராட்டத்தைப் பற்றி சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் எழுதிய ஒரு பெரிய நூலில் 'இந்தியாவின் மண்ணின் விடுதலைக்காக காங்கிரஸ் போரிட்ட அதே காலக் கட்டத்தில் சுயமரியாதை இயக்கமும் நீதிக் கட்சியும்

தந்தை பெரியாரும் சமுதாய விடுதலைக்காகப் போரிட்டார்கள்' என்ற உண்மையை ஒளிவு மறைவில்லாமல் "இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு" என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

சுயமரியாதை இயக்கம்

இப்படி இந்த இயக்கம் வெள்ளைக்காரர்களின் அடிமையாக இருக்கவில்லை. அதே காலக் கட்டத்தில் இந்தச் சமுதாயத்தின் எழுச்சிக்காக பாடுபட்ட இயக்கம், சுயமரியாதை இயக்கம், நீதிக் கட்சி, - ஜஸ்டிஸ் பார்ட்டி.

நீதிக் கட்சி என்று இதற்குப் பெயர் வந்தது கூட ஏன் என்றால் இந்த இயக்கம் 'ஜஸ்டிஸ்' என்று ஒரு பத்திரிகையை இயக்கத்திற்காக நடத்தியது. அந்தப் பத்திரிகையின் பெயராலேயே அந்தக் கட்சியை 'ஜஸ்டிஸ் பார்ட்டி' என்று ஆங்கிலத்தில் அழைத்தார்கள். பிறகு 'ஜஸ்டிஸ்' என்பது தமிழிலே நீதிக் கட்சி என்றாயிற்று. அந்தக் கட்சியை தந்தை பெரியார் சுவீகரித்துக் கொண்டார் என்று சொன்னால் அது சரியாக இருக்கும்.

ஏழை எளிய மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, பிராமணர் அல்லாத மக்களுக்காக தந்தை பெரியார் கொடுத்த குரல் - இந்த மக்களுக்கு கல்வித் துறையில், வேலை வாய்ப்புத் துறையில், அதிக இடங்கள் வேண்டுமென்கிற அந்தப் போர்க்குரல் அன்றைக்குக் காங்கிரஸ் கட்சியின் செவிகளில் கேட்கவில்லை. ஆனால் இப்போது காங்கிரஸ்காரர்கள் நம்மோடு சேர்ந்து கொண்டு இட ஒதுக்கீடு கோருகிறார்கள்.

ஆனால் 1925இல் திரு.வி.க. அவர்களே காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த போது - பெரியாரின் நண்பர் என்ற போதிலும் அவரே 1925இல் பெரியார் கொண்டு வந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென்று சொல்லி விட்டார். ஜஸ்டிஸ் கட்சி சொல்கிற இட ஒதுக்கீட்டை நாமும் கேட்க வேண்டுமென்று பெரியார் தீர்மானம் கொண்டு வந்து, அது ஏற்கப்படாத காரணத்தால் பெரியார் அந்த மாநாட்டுப் பந்தலிலிருந்து வெளியேறி காங்கிரசை ஒழிப்பது தான் முதல் வேலை என்று அறிவித்துவிட்டார். இது தென்னகத்தின் வரலாற்றில் புதிய திருப்பம்.

நீதிக்கட்சி

அதற்குப் பிறகு பெரியார் நீதிக் கட்சியின் தலைவராக வந்தார். நீதிக் கட்சி தோல்வி அடைந்த பிறகும் அதிலே இருந்த பெரிய பெரிய ஜமீன்தார்கள், மிட்டாதார்கள், மிராசுதாரர்கள் எல்லாம் பெரியாரைத் தலைவராக ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள். ராஜா சர் முத்தையா செட்டியாரை நீதிக் கட்சி அமைச்சராக ஏற்றுக் கொண்டார்கள். அதற்குப் பிறகும் ஜஸ்டிஸ் கட்சி தலைதூக்க முடியவில்லை. பிறகு தான் அண்ணாவின் பிரவேசம். பெரியாரைத் தொடர்ந்து நீதிக் கட்சியிலே அண்ணா நுழைந்தார். அண்ணாவின் ஆதங்கம் என்னவென்றால் உண்மையான நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் பரங்கியர்களுக்கு அடிமையாக இருக்கிறோம் என்று தவறாக, புளுகுப் பிரச்சாரத்தைச் செய்து இந்த இயக்கத்தின் நோக்கத்தை சாக அடிக்கிறார்களே என்பதற்காக அண்ணா அன்றைக்குப் பெரியாரிடம் கலந்து பேசி ராவ்பகதூர், திவான் பகதூர், சர் போன்ற வெள்ளைக்காரர்கள் கொடுத்த பட்டத்தை எல்லாம்

நாம் துறக்க வேண்டும், வெள்ளைக்காரர்களுடைய ஆட்சிப் பொறுப்பில் எந்த இடத்திலும் நாம் இருக்கக் கூடாது - அந்தப் பதவிகளை யெல்லாம் ராஜினாமா செய்ய வேண்டும். நாமும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் நேரடியாக கலந்து கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை அண்ணா அவர்கள் சேலத்தில் நடைபெற்ற சிறப்பு மிகுந்த மாநாட்டில் கொண்டு வந்தார். அந்தத் தீர்மானத்தை எதிர்த்து நீதிக் கட்சியில் இருந்த ராவ்பகதூர்கள், திவான்பகதூர்கள் எல்லாம் வெளியேறினார்கள். இப்படி மாளிகையில் இருந்த கட்சியை மரத்தடிக்குக் கொண்டு வந்த பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களையே சாரும் என்ற வரலாற்றை அண்ணா அவர்கள் உருவாக்கினார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம்

அதற்குப் பிறகு இயக்கத்திற்கு திராவிடர் கழகம் என்று பெயர் சூட்டப்பட்டது. பின்னால் 1949 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகமாக உருவாயிற்று. இதெல்லாம் நம்முடைய சமீபக் காலத்து வரலாறு. இந்த வரலாறுகளை எல்லாம் நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொண்டால் மாத்திரம் போதாது. நீங்களும் முழுமையாகத் தெரிந்து கொண்டு, தெரிந்து கொண்டதை மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுகின்ற அந்த வல்லமையைப் பெற்றாக வேண்டும். அந்த ஆர்வத்தை நீங்கள் பெற்றாக வேண்டும்.

இதையெல்லாம் நான் உங்களிடம் எடுத்துக் கூறக் காரணம் சிலிர்த்தெழுந்த இந்த இயக்கம் - வீறு கொண்ட தமிழ்ச் சமுதாயம் என்றென்றும் அந்த உணர்வோடு வாழ்ந்திட வேண்டும், அதற்கு இளைஞர் அணி தம்பிமார்களாகிய

நீங்கள் எல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதைக் கூறுவதற்காகத் தான் இந்த வரலாற்றுப் பின்னணியை உங்களுக்கு நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

இன்றைக்கு தி.மு.கழக ஆட்சி நடைபெறுகிறது. இந்த ஆட்சி ஏதோ ஒரு கருணாநிதி முதலமைச்சராக இருக்க வேண்டும், மற்றவர்கள் எல்லாம் அமைச்சர்களாக இருக்க வேண்டும் என்கின்ற ஒரு ஆசையின் காரணமாக உருவானதல்ல. **1967**ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி நம்முடைய அன்பிற்குரிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் உருவான போது என்னென்ன நடைபெற்றது? அண்ணா இரண்டு ஆண்டுக் காலம் தான் அதற்குப் பிறகு வாழ்ந்தார். **1967** மற்றும் **1968**; **1969**ஆம் ஆண்டு ஆரம்பத்திலேயே நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்.

அண்ணாவின் சாதனை

இங்கே பேசியவர்களில் பலர் 'அண்ணா அவர்களை நாங்கள் கண்டதே இல்லை' என்றார்கள். அண்ணாவைக் கண்டு அவரோடு உண்டு உறங்கி கடைசி வரையில் கூடவே இருந்தவர்களில் ஒருவன் என்ற முறையில் நான் சொல்கிறேன். அந்த அண்ணா அவர்கள் **1967**ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த இரண்டாண்டு காலம் கூட முழுமையாக இல்லாமல் மறைந்தார்கள். என்றாலும் அந்த மறைகின்ற காலத்திற்குள்ளாக அவர் சாதித்த சாதனை என்றென்றும் நம்முடைய வரலாற்றில் கோடிட்டு வைத்துக் கொள்ள வேண்டியவைகளாகும்.

தமிழ்நாடு

நம்முடைய நீண்ட காலக் கோரிக்கையாக இருந்த இந்த மண்ணுக்கு தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்ற இந்தச் சாதனையை தன்னுடைய ஆட்சிக் காலத்திலே செய்து காட்டியவர் அண்ணா. அதற்கு ஒரு வரலாறு உண்டு.

தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்பதற்காக காங்கிரஸ்காரர்களில் ஒருவர் - அதிக காலம் சிறையிலே இருந்தவர் - சங்கரலிங்க நாடார். அவர் விருதுநகரில் அறுபது நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் இருந்தார். அப்போது காங்கிரஸ் ஆட்சி! சங்கரலிங்க நாடாருடைய உண்ணா நோன்பு அப்போது கேலி செய்யப்பட்டது, கிண்டல் செய்யப்பட்டது. இவைகளை எல்லாம் நீங்கள் மேடையிலே சொல்ல வேண்டும் என்பதற்காக நான் கூறவில்லை. உங்கள் நெஞ்சிலே இந்தக் கருத்துக்களை பதிய வைத்துக் கொள்வதற்காகத் தான் கூறுகிறேன்.

விருதுநகரில் சங்கரலிங்க நாடார் உண்ணாவிரதம் இருக்கிறார். அவரைப் போய்ப் பார்த்து உண்ணா நோன்பை நிறுத்தச் சொல்லக் கூட யாரும் செல்லவில்லை. அப்போது அங்கே சென்று அவரை நேரில் பார்த்தார் அண்ணா. ஆனால் அதற்குப் பிறகும் சங்கரலிங்க நாடார் தன்னுடைய உண்ணா நோன்பை நிறுத்தவில்லை. உண்ணா நோன்பு இருந்தபோதே மாண்டு போனார்.

அவர் மாண்ட பிறகு கூட அவருடைய உடலை, பிரேத பரிசோதனை செய்ய வேண்டுமென்று அன்றைக்கு இருந்த காங்கிரஸ் ஆட்சி கட்டளையிட்டது. உண்ணாநோன்பு இருந்து அவர் இறந்தது எல்லோருக்கும் தெரியும்.

அவரை முழு உருவமாகக் கொண்டு போய் அடக்கம் செய்ய அனுமதி கொடுங்கள் என்று கேட்டும் தரவில்லை. மதுரை தெருக்களிலே அவருடைய உடலை ஊர்வலமாக எடுத்துச் செல்ல வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டது. அதுவும் நிறைவேற்றப்படவில்லை. இந்தக் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படாமல் தான் சங்கரலிங்க நாடாரின் உடல் அன்றைக்கு அடக்கம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகாவது தமிழ்நாடு என்று பெயர் வைக்கப்பட்டதா என்றால் இல்லை. அறிஞர் அண்ணா தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு தான் தமிழ்நாடு என்று பெயரைச் சூட்டினார்கள்.

ஒரு செயலைச் செய்கின்ற வரையில் தான் அது பெரிதாகத் தெரியும். அந்தச் செயல் நடந்த பிறகு அது சிறிதாகத் தெரியும். அதைப் போல தமிழ்நாடு என்பது இப்போது சிறியதாகத் தெரியலாம். ஆனால் அதற்காக உண்ணா நோன்பு இருந்து சங்கரலிங்க நாடார் மாண்டார் என்ற செய்தி மறக்கப்பட்டு விட்டது.

இப்போது கூடப் பாருங்கள். அந்த சங்கரலிங்க நாடாருக்கு கிண்டியில் தியாகிகள் மணி மண்டப முகப்பிலே ஒரு சிலை வைக்கப்படும் என்று நான் பேரவையிலே அறிவித்த போது, நம்முடைய தரப்பிலே உள்ளவர்கள் தான் அன்றைக்கு கை தட்டினார்களே அல்லாமல் எதிர் தரப்பில் இருந்தவர்கள் கை தட்டவில்லை. காரணம் என்ன தெரியுமா? அதைச் சொன்னால் காங்கிரஸ் ஆட்சியில் தமிழ்நாடு என்று பெயர் வைக்கவில்லை என்பது மக்களுக்கு நினைவிற்கு வந்து விடுமே என்பதற்காகத் தான் அவர்கள் கை தட்டக்கூட முன்வரவில்லை!

ஆனால் தமிழ்நாடு என்று பெயர் வைத்தபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தொண்டனைப் போல பேரவையிலே சொன்னார்கள். 'நான் தமிழ்நாடு என்று மூன்று முறை சொல்வேன், அனைவரும் வாழ்க' என்று சொல்ல வேண்டுமென்று கூறிவிட்டு, அண்ணா அவர்கள் உரத்த குரலிலே தமிழ்நாடு என்று சொல்லச் சொல்ல, தமிழ்நாடு என்று பெயர் வைக்க மறுத்த காங்கிரஸ்காரர்கள் உட்பட அனைவரும் வாழ்க! வாழ்க! என்று முழங்கினார்கள். இது எவ்வளவு பெரிய வரலாறு என்று யாருக்கும் தெரியாது. அதெல்லாம் உங்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத் தான் இதனை நான் சுட்டிக் காட்டுகிறேன்.

இருமொழிக்கொள்கை

இனிமேல் தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் இந்திக்கு இடம் இல்லை, தமிழ் ஆங்கிலம் இரண்டும் தான், என்று இரு மொழிக் கொள்கையை அன்றைக்கு அறிவித்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

சுயமரியாதைத் திருமணம்

அதைப்போலவே, இனி நடைபெறும் சுயமரியாதை திருமணங்கள் மாத்திரமல்ல, இதுவரை நடைபெற்ற சுயமரியாதைத் திருமணங்களும் சட்டப்படி செல்லுபடியாகும் என்று ஒரு சட்டத்தை நிறைவேற்றியவர் அண்ணா அவர்கள். இவைகள் எல்லாம் இன்றைக்கு சாதாரணமாகத் தெரியலாம். ஏனென்றால் நான் ஏற்கனவே சொன்னதைப் போல நடக்குமா என்று கேள்விக் குறியாக இருக்கும்போது அது பெரிய விஷயம், ஆனால் நடந்த பிறகு அது சாதாரண விஷயம்.

கடுமையாகக் காதலிக்கும்போது, அதற்காக கஷ்ட நஷ்டங்களை ஏற்று அடிபட்டு, உதைபட்டு, சிரமப்படும்போது பெரிதாகத் தோன்றும். ஆனால் காதலித்தவரையே திருமணம் செய்து கொண்டு இரண்டு குழந்தைகளையும் பெற்ற பிறகு முன்பு காதலித்ததெல்லாம் சாதாரண விஷயமாக ஆகி விடுகிறதல்லவா? அது போலத்தான்!

இந்தி ஆதிக்கத்துக்கு இடமில்லை

நான் இங்கே சுட்டிக்காட்டியுள்ள தமிழ்நாடு என்கிற பெயர் வைத்த வரலாறு - இந்தி ஆதிக்கத்திற்கு தமிழகத்திலே இடம் இல்லை என்று ஆணையிட்ட வரலாறு - சுயமரியாதை திருமணங்கள் இனிமேல் நடப்பவை மாத்திரமல்ல, இதுவரை நடந்தவைகளும் செல்லுபடியாகும் என்ற சட்டம் ஆகியவைகளை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் இவைகள்யெல்லாம் நாம் ஆளுங்கட்சியாக வருவதற்கு முன்பு முழங்கிய கோரிக்கைகள். ஆட்சிக்கு நாம் வராவிட்டால் இவைகள் எல்லாம் நிறைவேறியிருக்காது. பெரியார் காலத்தில் நாம் முழங்கிய சுயமரியாதை கொள்கைகளை, எடுத்து வைத்த கோரிக்கைகளை நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காரணத்தினால் அதையெல்லாம் ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

பெண்களுக்குச் சொத்துரிமை

உங்களுக்கு நினைவிருக்கும். 1989ஆம் ஆண்டு நான் சட்டமன்றத்தில் அறிவித்தேன். 1929ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டத்தில் நடைபெற்ற மாநாட்டில் தந்தை பெரியார் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் தான்,

ஆண்களைப் போல பெண்களுக்கும் சொத்துரிமை வேண்டும் என்ற தீர்மானம். அறுபதாண்டுகள் வரை யாரும் அந்தத் தீர்மானத்தைப் பற்றி கவலைப்படவில்லை. இருந்தாலும் பெரியாரின் 1929ஆம் ஆண்டு தீர்மானத்தை 1989இல் நான் சட்டமாக ஆக்கியபோது பேரவையிலேயே அதனை அறிவித்தேன்.

நாம் சுயமரியாதை இயக்கமாக, ஜஸ்டிஸ் கட்சியாக, நாட்டிற்குச் சொன்னதையெல்லாம் சாதனைகளாக ஆக்கக்கிடைத்த வாய்ப்பு தான் இந்த ஆட்சிப் பொறுப்பு என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது. இந்த ஆட்சிப் பொறுப்பு மாத்திரம் நம்முடைய இலட்சியம் அல்ல. பதவிப் பொறுப்புக்கு வரவேண்டும் என்பது மாத்திரம் நமது இலட்சியம் அல்ல. அது மாத்திரம் இலட்சியும் இல்லை என்று தான் கூறினேன். அது இலட்சியம் இல்லை என்று சொல்லவில்லை. இதுவும் இலட்சியம். இந்தப் பொறுப்புக்கு வந்ததால் தான் நம்முடைய அண்ணனின் கொள்கைகளை பெரியாரின் இலட்சியங்களை சட்டமாக ஆக்கக் கூடிய, நடைமுறைப்படுத்தக் கூடிய வாய்ப்பு கிடைத்து அவைகளை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

பகுத்தறிவாளர் ஆகுக

அதே நேரத்தில் நம்முடைய அடிப்படையையும் மறந்துவிடக் கூடாது. தன்மான இயக்கத்தின் அடிப்படை கொள்கைகளை மறந்து விடக் கூடாது. பொதுவாக இளைஞர்கள் எல்லாம் பகுத்தறிவாளர்களாகத் திகழ வேண்டும்.

இன்றைக்கு நாம் தேர்தலில் நிற்கின்ற கட்சியாக ஆகிவிட்ட காரணத்தால் எல்லோரிடமும் போய் நீங்கள் பகுத்தறிவாளர்களாக இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்திச் சொல்ல முடியாது. நம்மால் முடிந்தது, நாம் பகுத்தறிவாளர்களாக இருப்பதுதான். அதையாவது செய்ய வேண்டும். இங்கே கூட சில இளைஞர்கள் மேடைக்கு வந்து பேசிய போது என்னைப் பார்த்து தலைவா என்று அழைத்த போது அவர்கள் கையிலே மின்னிக் கொண்டிருந்த கறுப்புக் கயிறை நான் பார்த்தேன். நம் அளவிலாவது பகுத்தறிவாளர்களாகத் திகழ வேண்டும். பெரிய பகுத்தறிவாளர்களாலே கூட அவர்கள் குடும்பத்திலே உள்ளவர்களைத் திருத்த முடிவதில்லை. அது அவர்களுடைய உரிமை என்று விட்டு விடுங்கள். ஆனால் நாமாவது பகுத்தறிவாளர்களாக இருக்க வேண்டும். நாம் பகுத்தறிவாளர்களாக இருந்தால்தான் நம்முடைய சமுதாயத்தை, எதிர்காலத்தில் வருகின்ற பரம்பரையை, வாரிசுகளை பகுத்தறிவாளர்களாக ஆக்க முடியும். இல்லாவிட்டால் இந்தச் சமுதாயம் மூட நம்பிக்கையிலே அழிந்து விடும். இது விஞ்ஞான யுகம், அறிவுலகம்.

ஒரு காலத்திலே வீட்டிலே உள்ள தாய்மார்கள் நிலாவைக் காட்டி, நிலா, நிலா; ஓடி வா! என்று பாட்டுப் பாடி அழைத்த காலம் ஒன்றிருந்தது. இன்றைக்கு நிலா கீழே இறங்கி வராத காரணத்தால், 'நிலாவிற்கே வருகிறேன்!' என்று கூறிச் சென்று அங்கிருந்து மண்ணையும் கல்லையும் எடுத்துக் கொண்டு வந்து காட்டுகின்ற காலம் இது. அந்த அளவிற்கு விஞ்ஞானம்

வளர்ந்திருக்கின்ற கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்னும் பத்தாண்டு காலத்திற்குப் பிறகு எந்த அளவிற்கு வளர்ச்சி இருக்குமோ என்று தெரியாது.

நேற்றையதினம் புதுமை என்று சொல்லப்பட்டது இன்றைய தினம் பழமையாக ஆகிவிடுகிறது. இந்த யுகத்தில் வாழும் நாம் பகுத்தறிவாளர்களாகத் திகழ வேண்டும் என்பதை மறந்து விடக் கூடாது.

புண்படுத்தாமல் பண்படுத்துக

ஆனால் அதே நேரத்தில் நாம் தேர்தலில் நிற்கின்ற கட்சி என்பதையும் மறந்து விடாமல் மற்றவர்களைப் புண்படுத்தாமல் அவர்களைப் பண்படுத்தும் முயற்சியிலே இளைஞர்கள் ஈடுபடவேண்டும். பெரியாரின் முறை ஆபரேஷன். அண்ணாவின் முறை மூலிகை மூலமாக குணப்படுத்தும் முறை. பெரியாரின் முறை வந்த பின் காப்பது. அண்ணாவின் முறை வரும் முன் காப்பது. அண்ணாவின் அணுகுமுறைக்கும் பெரியாரின் அணுகுமுறைக்கும் இடையே பெரிய வேறுபாடு உண்டு என்ற போதிலும் இருவரின் அணுகுமுறைக்கும் இடையே முரண்பாடு கிடையாது. முரண்பாடு இல்லாவிட்டாலும் வேறுபாட்டின் காரணமாக பெரியாரின் கொள்கைகள் அவர் சொன்ன கருத்துகள் பெரிய அளவிலே பரவ முடியாத நிலை.

ஆனால் அண்ணா அவர்கள் அதைப் பரவச் செய்கின்ற முயற்சியிலே ஈடுபட்டார். பெரியார் முரட்டுத்தனமாக சில காரியங்களைச் சொல்வார். நான் பெரியாரை குறைத்துப் பேசுவதாக நீங்கள் யாரும் கருத மாட்டீர்கள்.

பெரியாரிடம் எனக்குள்ள அன்பும் பாசமும் யாருக்கும் குறைந்ததல்ல. இன்று பெரியாரின் அணுக்கத் தொண்டர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்களே அவர்களைப் போல வாய் ஜாலம் பேசுபவன் அல்ல நான். பெரியாரின் குருகுலத்திலே பாடம் கற்றவன் நான். அவருடைய கொள்கைகள், இலட்சியங்கள் அனைத்தும் எனக்குத் தெரியும். அவருடைய அணுகுமுறையே வேறு. அதே அடிப்படையை வைத்துக் கொண்டு அண்ணா அவர்கள் கையாண்ட அணுகுமுறை வேறு.

கம்பராமாயணத்துக்கு நெருப்பு

பெரியார் கம்பராமாயணத்தைக் கொளுத்தப் போவதாக அறிவித்து அதற்காகவே சேலத்தில் மாநாடு கூட்டினார். அப்போது தமிழகமே பரபரப்பாக இருந்தது. அதற்காக ரா.பி. சேதுப்பிள்ளையோடு அண்ணா சொற்போர் நடத்தினார், நாவலர் சோமசுந்தர பாரதியாரோடு அண்ணா சொற்போர் நடத்தினார். இவைகள் எல்லாம் மறக்க முடியாத நிகழ்ச்சிகள். அப்போது நாவலர் சோமசுந்தர பாரதியார் சொன்னார். 'கம்பராமாயணத்திலே உள்ள கதைகளுக்காக அதை ஏற்றுக் கொள்ள வேண்டாம்; ஆனால் அதிலே உள்ள தமிழ்க் கவிதைகளுக்காக, அதன் அழகுக்காக ஏற்றுக் கொள்க' என்று சொன்னார். அதற்கு அண்ணா அவர்கள் பதில் கூறியதோடு திராவிடநாடு பத்திரிகையிலும் எழுதத் தொடங்கினார். 'கம்பராமாயணத்தில் உள்ள கதையை மறந்து விட்டு, அதிலே வருகின்ற கவிதை நயம், ஆற்றோரம், கடல் வளம் பற்றிய கவிதைகளை மக்களுக்குச் சொல்லிக் கொடுங்கள். ஆனால் அந்தக் கதையிலே உள்ள கருப்பொருளை ஏற்றுக் கொள்ள முடியாது' என்று அண்ணா சொன்னார். அது அவருடைய அணுகுமுறை.

ஆனால் பெரியார் அதை கொளுத்தியே தீருவேன் என்று அதற்காக தேதி கொடுத்தார். தேதி கொடுத்து மாநாடு நடந்தது. மாநாட்டில் கம்பராமாயணம் கொளுத்தப்படும் என்றும் பெரியார் அதற்கு தீ மூட்டுவார் என்றும் செய்திகள் வந்தன. ஆனால் நடந்தது என்ன? அப்போது ஒரு காலத்தில் நீதிக் கட்சியின் தலைவராக இருந்த ஆர்.கே. சண்முகம் செட்டியார் மத்திய அரசிலே நிதி அமைச்சராக இருந்தார். அவர் பெரியாருக்கு ஒரு தந்தி அதாவது 'கம்பராமாயணத்தைக் கொளுத்தும் நிகழ்ச்சியை தயவு செய்து நிறுத்தி விடுங்கள்' என்று கேட்டுக் கொண்டு அனுப்புகிறார். உடனே பெரியார், அந்த மாநாட்டில் 'ராமாயணத்தைக் கொளுத்துவதை நிறுத்தி வைக்கிறேன்' என்று கூறி, ராமாயணத்தைக் கொளுத்துகின்ற போராட்டத்தை நிறுத்தி விட்டார். அண்ணா அப்போது சொன்னார், 'இப்படி வரும் என்று தெரிந்து தான் நான் அதிலே தீவிரம் காட்டவில்லை' என்றார்!.

ஆகஸ்ட் 15

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு ஆகஸ்ட் 15ஆம் நாளை துக்க நாள் என்று பெரியார் அறிக்கை விட்டார். ஆனால் அண்ணா அதை மறுத்தார். மறுத்ததற்குக் காரணமாக - காலம் காலமாக வெள்ளைக்காரர்களுக்கு அடிமைகள் என்று நம்மை காங்கிரஸ்காரர்கள் சொல்லி வருகின்ற நேரத்தில் இந்தியா சுதந்திரம் பெற்ற நாளை துக்க நாள் என்று அறிவித்தால், அவர்கள் சொன்னது ஊர்ஜிதமாக ஆகிவிடும், எனவே அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன், அது துக்க நாள் அல்ல! இன்ப நாள்! என்று திராவிட நாடு பத்திரிகையிலே நீண்ட கட்டுரையை அண்ணா அவர்கள் எழுதினார்கள் என்றால் அது தான் ஒரு பெரிய திருப்பத்திற்கு காரணமாக அமைந்தது.

தமிழகத்தில் தி.மு.கழகத்தைப் பொறுத்தவரையில் அன்றைக்கு ஏற்பட்ட அந்த மாற்றம் வளர்ந்து பிறகு திராவிடர் கழகத்திலிருந்து அண்ணா அவர்கள் விலகி வர நேரிட்டது. பிறகு மணியம்மை திருமணம் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக பெரியாரிடம் இருந்து பிரிந்து ஒரு அரசியல் இயக்கத்தை தமிழ்நாட்டு மக்களுக்காக - தமிழ்ச் சமுதாயத்திற்காகத் தொடங்க வேண்டும் என்கிற ஒரு உணர்வு ஏற்பட அந்த நிகழ்ச்சி அமைந்தது.

பிறகு தான் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது. அந்தக் கழகத்தின் இளைஞர் அணி அமைப்பாக நீங்கள் எல்லாம் இங்கே அமர்ந்திருக்கிறீர்கள் என்றால் தி.மு.க. தோன்றியபோது இத்தனை அணிகள் தி.மு.க.விலே இல்லை. இன்றைக்கு இளைஞர் அணி என்ற மகத்தான அணி இருப்பதை நாங்கள் காணுகிறோம்.

பேசிய ஒவ்வொருவரும் தங்களுடைய மாவட்டத்தைக் குறிப்பிட்டு தங்களை வளர்த்துக் கொண்டிருக்கின்ற தங்களின் மாவட்டச் செயலாளரைக் குறிப்பிட்டு மேலும் எங்களை வளர விடுங்கள் என்று அவர்களுக்கெல்லாம் வேண்டுகோள் விடுத்ததோடு ஒன்றியக் கழகங்களும், மாவட்டக் கழகங்களும் தங்களை மதிக்க வேண்டுமென்று அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்த காட்சியை நாம் பார்க்கும்போது அவர்கள் உங்களை மதிப்பதை விட, உங்களை மதித்துத் தான் தீர வேண்டும் என்கிற அளவிற்கு நீங்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது தான் உங்கள் முன்னால் நான் வைக்கின்ற வேண்டுகோள். என்னுடைய இந்த அன்பு வேண்டுகோளை நீங்கள் ஏற்றுத் தீர வேண்டும். அரசியல் ஒரு பக்கம், அது தேவையானது. தவிர்க்க முடியாது. அதே நேரத்தில் சமுதாயப் புரட்சியையும் மறந்து விடக் கூடாது.

பகுத்தறிவுக் கருத்துக்களைச் சொல்லவே - திருமணநிகழ்ச்சிகள்

இன்றைக்கு நடைபெறுகின்ற திருமணங்களில் கலந்து கொள்கிறோம் என்றால் சமுதாயக் கொள்கையை மறந்து விடக்கூடாது. மக்களுக்கு சமுதாயக் கருத்துக்களைச் சொல்ல வேண்டிய அந்தப் பொறுப்பிலிருந்து ஒதுங்கி விடக்கூடாது. அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே திருமண நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறோம். நாம் கலந்து கொள்கிற திருமணங்களைத் தவிர, சுயமரியாதை முறையிலே வேறு கட்சிகளின் சார்பிலே நடைபெறுகின்ற திருமணங்களை நீங்கள் பார்த்தால் அங்கே மணமகளைப் பற்றி, மணமகனைப் பற்றி அவர்களுடைய பெற்றோர்களைப் பற்றிப் பேசிவிட்டு நிகழ்ச்சி முடிந்து விடும். ஆனால் நாம் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சிகளில் சமுதாயக் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறோம். பகுத்தறிவுக் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறோம்.

இங்கே பேசிய சிலர் இன்றைக்கு நாம் கொண்டிருக்கின்ற கூட்டணி குறித்தும் பா.ஜ.க. கூட்டணியில் நாம் சேர்ந்திருப்பது பற்றியும் அதுகுறித்து நாட்டிலே நடைபெறுகின்ற தவறான பிரச்சாரம் பற்றியும் விளக்கினார்கள்.

அவைகளுக்கெல்லாம் பதில் அளிக்கும் திறன், ஆற்றல் உங்களுக்கு உண்டு என்பதை நீங்கள் இங்கே பேசியதில் இருந்தே என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

நம்முடைய இயக்கம் ஆரம்ப காலத்தில் இருந்தே கிறித்தவப் பெருமக்களுக்கும், இஸ்லாமியப் பெருமக்களுக்கும் தோழமையாக இருந்து வருகின்ற இயக்கம். ஆனால் கம்யூனிஸ்ட்களானாலும் காங்கிரஸ்காரர்களானாலும் அவர்கள் முஸ்லீம் லீக்கை என்றைக்கும் ஒத்துக் கொண்டவர்கள் அல்ல. அவர்களை வகுப்புவாதிகள் என்று ஒதுக்கியவர்கள்.

" இஸ்லாமியர்கள் வகுப்புவாதிகள், தங்கள் கூட்டத்திற்கே அவர்கள் வரக் கூடாதென்று உரைத்தவர்கள்; முஸ்லீம் லீக்கினர் வந்தால் நாங்கள் அந்த மேடையிலோ கூட்டத்திலோ கலந்து கொள்ள மாட்டோம் என்று பட்டவர்த்தனமாக எடுத்துக் கூறிய சி.பி.எம்., சி.பி.ஐ., கட்சியினர் இப்போது முஸ்லீம்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்றால் இதை நீங்கள் முஸ்லீம் பெருமக்களிடம் எடுத்துச் சொல்லவேண்டும். முஸ்லீம் இயக்கங்கள் இன்றைக்கு சிதறுண்டு கிடக்கின்றன. ஒரு பக்கம் அப்துல் சமது அவர்கள் தலைமையிலே உருவான முஸ்லீம் லீக். மற்றும் வேறு சில தீவிர வாத இயக்கங்கள் இருக்கின்றன. நீங்கள் இதற்கிடையே இவர்களை விட்டு விலகியிருக்கின்ற இஸ்லாமியப் பெருமக்களையெல்லாம் அணுகி அவர்களிடம் உண்மை நிலையை எடுத்து விளக்க வேண்டும்.

தெருமுனை, திண்ணைப் பிரச்சாரம்

இஸ்லாமியப் பெருமக்களிடம் பா.ஜ.க. பற்றி ஒரு கலக்கத்தை ஒருசிலர் உருவாக்கியிருக்கிறார்கள் என்பது உண்மைதான். பொய்ப் பிரச்சாரம் செய்கிறார்கள். அதற்கு ஈடு கொடுத்து அதை முறியடிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உண்டு.

இங்கே சில இஸ்லாமிய இளைஞர்கள் பேசியதை நான் கேட்டேன். அவர்கள் எல்லாம் பொதுக் கூட்டங்களிலே பேசுவது மாத்திரமல்ல, தெரு முனைப் பிரச்சாரங்களிலும், ஏன் திண்ணைப் பிரச்சாரங்களிலும் ஈடுபட வேண்டும். கிறித்தவப் பெருமக்களுக்கு கடந்த கால ஆட்சியிலே இழைக்கப்பட்ட அவமானங்களை எல்லாம் எடுத்து விளக்கிட வேண்டும். அன்னை மேரியாக வேடம்போட்டுக் கொண்டு போஸ்டர் ஒட்டிய அநியாயத்தை ஞாபகப்படுத்த வேண்டும். இன்றைக்கு அவர்கள் சேர்ந்திருக்கின்ற கூட்டணி உண்மையிலேயே இஸ்லாமியர்களையும் கிறித்தவர்களையும் மதிக்கின்ற கூட்டணியா என்பதை எடுத்து விளக்கிட வேண்டும்.

வெற்றிகளைத் தலைமேலே குவியுங்கள்

நாங்கள் தான் கொடி கட்டுகிறோம், பேனர் கட்டுகிறோம், சுவரொட்டி ஒட்டுகிறோம் என்று ஒரு இளைஞர் அணித் தம்பி இங்கே பேசினார். உண்மையிலேயே அது நடைபெற்றால் எனக்கு மகிழ்ச்சிதான்.

ஏனென்றால் நான் போகின்ற இடங்களில் எல்லாம் சாலையின் இரு மருங்கிலும் நூற்றுக்கணக்கான கொடிகள் நடப்பட்டிருப்பதைக் காணுகிறேன். அவைகள் காசு கொடுத்து நடப்பட்ட கொடிகளாக இல்லாமல் கட்சித் தோழர்கள் உழைத்து நடப்பட்ட கொடிகளாக இருப்பதிலே தான் எனக்கு மகிழ்ச்சி.


நீங்கள் தேர்தல் வெற்றியைக் கொண்டு வந்து என்னுடைய காலடியிலே வைப்பதாகத் தெரிவித்தீர்கள். காலடியிலே வேண்டாம், வெற்றிகளை என்னுடைய தலையிலேயே குவியுங்கள், தாங்கிக் கொள்கிறேன்.

வணக்கம்!

தமிழ்நாடு என்று நமது
நிலத்திற்குப் பெயர் வைத்திருக்கிறோம்!
மொழியை எங்கே மறந்து விடுவோமோ
என்பதற்காகவே, இந்த நாட்டின் பெயரில்
தமிழைச் சேர்த்து தமிழ்நாடு என்கிறோம்
தமிழை நாடு –
தமிழ்ப் பண்பை நாடு –
தமிழ் உணர்ச்சியை நாடு –
தமிழ் இலக்கியத்தை நாடு –
தமிழ் உயர்வை நாடு
என்பதற்காகத்தான்.
தமிழ்நாடு என்று
பெயர் வைத்திருக்கிறோம்
தமிழ்நாடு என்பதை ஒரு நிலத்தின்
பெயராக மட்டும் கருதாதீர்கள் – அது
நமக்கு நாமே சொல்லிக் கொள்ளும்
அறிவுரை என்று கருதுங்கள்!

– தலைவர் கலைஞர்.

தி.மு.க. அறக்கட்டளை
போராசிரியர்
அன்பழகன் நூல்
நிலையம்



ARACU ARTS